Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

பிரோ
(1889
ஆவணி
ஆரம்பமா

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சுஅ] யாழ்ப்பாணம்:- துன்முகி ஹூ வைகாசி மீ உசு உ வெள்ளிக்கிழமை (8 JUNE 1956) [இல -

# ஆனி ஐந்தாம் நாள் அட்டூழியப்

## சாத்விகச் சத்தியாக்கிரகிகளைத் தாக்கினர் தறுகணர

## 'மக்கள்' ஆட்சியில் மக்களுக்கே

## சித்திரவதைச் சீவியமா?

'தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்துச் சாத்விகமுறையிலே சத்தியாக்கிரகம் செய்த தொண்டர்களைத் தடிகொண்டு அடித்தும் கல்லாற் காயப்படுத்தியும் காலால் உதைத்தும் காட்டிற் கட்டுக் கடங்காது திரியும் விலங்கினத்திலும் பார்க்க மிருகத்தனமாக அட்டூழியஞ் செய்து கொழும்புமாநகரத்திற் காலிமுக முன்றிலிற் கயவர் கூட்டம் ஆரவாரஞ் செய்தது.

பாராளுமன்றத்துப் படிக்கட்டிற் சத்தியாக்கிரகப் பணி செய்யப்படாதெனத் தடுத்த அரசாங்க அறிவித்தலை மீறாது அண்மையிலுள்ள காலிமுக முன்றிலில் ஐஞ்ஞாற்றுக்கணக்கான தொண்டர்கள் பாராளுமன்றப் பிரதிநிதிகள் தலைமையில் நடைபெற்ற சாத்வீக எதிர்ப்பை முறித்துவிட முயன்ற கயவர் கூட்டம் செய்த அட்டூழியங்கள் சொல்லுக்கடங்கா. இந்த நேரத்திலே பிரதமரும் மந்திரிமார்களும் என்ன நடக்கின்றது என்று எட்டியும் பார்க்கவில்லை. பாடிகாவலர் பக்கத்தில் நின்றும் பழிச் செயல்கள் நடைபெற்றவண்ணமாக இருந்தன.

முன்னேற்பாட்டின் படி செவ்வாய்க்கிழமை காலை பம்பலப்பிட்டி ஆலயத்திலிருந்து புறப்பட்டுக் காலிமுக முன்றிலை அடைந்த திருவாளர்கள் செல்வநாயகம், வன்னியசிங்கம், அமிர்தலிங்கம், அழகக்கோன், கந்தையா, மூஸ்தாபா, நவரத்தினம், இராசவரோதயம், இராசதுரை, முதலியார் காரியப்பர் முதலிய பாராளுமன்றத்து அங்கத்தவர்களும், ஐந்நூற்றுக்கணக்கான அநுதாபிகளும் "சத்தியாக்கிரகத்"தை ஆரம்பித்தவுடன் பலமான வசைமொழிக்கும் தடியடிக்கும் கல்லெறிக்கும் ஆளாக்கப்பட்டனர். இந்த அடாத செயல்கள் சத்தியாக்கிரகிகளைத் தளரவைக்கவில்லை. மழைபெய்தும் மனம் கோணவில்லை. ஆனாற் பலர் காயமுற்றனர். திருவாளர்கள் அமிர்தலிங்கம், வன்னியசிங்கம், நவரத்தினம், மூஸ்தாபா ஆகியோர் கூடுதலான காயமடைந்தனர். திருவாளர்கள் பொன்னம்பலம், சுந்தரலிங்கம் அவர்கள் இடையிலே சத்தியாக்கிரக இடத்துக்குச் சென்றனர். வண. தனிநாயக அடிகளும் சென்றிருந்தார். இவர்கள்மீதும் கல்வீசப்பட்டன.

### வடமாகாண ஆசிரியசங்கம்

தனிச்சிங்களச் சட்டத்தை எதிர்த்தும் தமிழுக்குச் சம அந்தஸ்துக் கொடுக்கப்படவேண்டுமென்றும் வடமாகாண ஆசிரிய சங்கத்தாரால் ஏகமனதாகப்பிரேரணைகள் நிறைவேற்றப் பெற்றன.

## தனிச் சிங்களம் பற்றி

### யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை தீர்மானம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் வி... கூட்டமொன்று தலைவர் முடிக்குரிய நியாயவாதி ... த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள் தலைமையில் ந... பெற்றது. தனிச்சிங்களச் சட்டத்தைப் பலமா... கண்டிக்கும் கருத்துக்கள் பலவாறு வெளியிடப்... டன. சபையார் தங்கள் கருத்துக்களை ஏகமனதா... பின்வருமாறு தீர்மானித்தனர்.

இலங்கை நாடானது சிங்களவர் மட்டுமே வாழும் ஒரு நாடல்ல. அதில் தமிழ் மக்களும் வாழ்கின்றார்கள். பெரும்பான்மைச் சமுசத்தார் சிறுபான்மைச் சமுகத்தாரை ஆளுவது என்பது சனநாயகமன்று. தமிழர்களிடையேசிங்களத்தைத் திணிப்பதுமுற்றி... அநீதியான செயலாகும்... அவ்வாறுசெய்வது தமி... பேசும் மக்கள்மீது சிங்... வர்கள் ஆட்சி செலுத்... தற்கொப்பாகும். எவ்... சந்தர்ப்பத்திலும் தங்க... சிங்களவர் அடிமை...

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## திருவள்ளுவர் விழா

மேற்படிவிழா சதானந்த வித்தியாசாலை முத்தமிழ் மாணவ மன்றத்தினரால் (30-5-56) புதன்கிழமை பிற்பகல் திரு. வ. கந்தையா அவர்களின் தலைமையில் கொண்டாடப்பட்டது. வள்ளுவர் பெருந்தகையின் வாழ்க்கையின்நோக்கத்தைத் தலைவர் தலைமைப் பேருரையில் விரித்துரைத்தார். பின்பு சைவப்புலவர் ச. சச்சிதானந்தம் அவர்கள் "வள்ளுவர் வாய்மொழியின் மாண்பு" என்ற விடயம் பற்றி சொற்பொழிவு ஆற்றும்போது இன்றைய சூழ்நிலையில் தமிழ் மொழிக்கும், தமிழ் மொழி பேசும் மக்களுக்கும் விமோசனம் ஏற்படவேண்டுமானல் ஒவ்வோர் தமிழ்மகனும் திருக்குறளை அவசியம் கற்கவேண்டுமெனவும், வள்ளுவர் வாய்மொழியைப் பின்பற்றி வாழவேண்டுமெனவும், வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வத்தன்மை அடைதலே எமது பிறவியின் பெரும் பயனாக அமையவேண்டுமெனவும் குறிப்பிட்டார். செல்வி. ச. சரஸ்வதியால் "திருவள்ளுவர்" என்ற மனனப் பேச்சு நிகழ்த்தப்பட்டது. சங்கீத வகுப்பு மாணவர்களால் வள்ளுவரின் நினைவுப்பாடல்கள் பாடப்பட்டன. செல்வன் வை. பாலசுப்பிரமணியம் ஆசிரியர் திரு. இ. முருகேசு என்போர் குறிப்புரை கூறினர்.

## மக்கள் அநுதாப மாபெருங்கூட்ட...

### காந்திய முறையைக் கைவிடமாட்டோம்

**யாழ்ப்பாண முற்றவெளியில் என்றுங் காணப்படாத 'மனித சமுத்திரம்' புதன்கிழமை மாலை 5 மணி தொடக்கம் ஒரே அமைதியாய் அநுதாப மாபெருங் கூட்டத்திற் பங்குபற்றியது.**

வைத்தியகலாநிதி திரு. S சுப்பிரமணியம் அவர்கள் தலைமை வகித்து இந்த நாள் தமிழ்பேசும் சமுகத்தை ஒன்றுபடுத்தவும் உள்ளதை உள்ளபடி அறிந்துகொள்ளவும் இனிச் செய்வதென்னவென்று ஆராயவும் வேண்டிய பொறுப்பு வாய்ந்த தினம் என்று கூறிச் சத்தியாக்கிரகிகளின் தொண்டின் பெருமையையும் அவர்களின் அமைதியான சகிப்புத் தன்மையும் உலகமே மெச்சும் என்று எடுத்துக் காட்டினர்.

சத்தியாக்கிரகத்திற் பங்குபற்றிய வழக்கறிஞர்: சு. நடராசாவும், வைத்திய கலாநிதி S. A. தர்மலிங்கமும் அங்கு நிகழ்ந்தனவற்றை ஆதியோடந்தமாக விரித்துக்கூறி இந்த ஆபத்தான நேரத்தில் எல்ல... தமிழ்பேசும் தலைவர்க... ஒருங்கு சேர்ந்திருப்ப... நல்ல அறிகுறி என்... கூறிச் சாத்வீகச் சத்தி... கிரகத்தின் வெற்றி... ப்பற்றிப் பேசின... வண பிதா. மதுரநாய... வண பிதா. நைல்சு, கா... எம். எம். சுலுத்தான் ... வாளர்கள் இ. அரியர... னம், எஸ். துரைராச... கம், புதுமைலோலன், ... துவான் வேலன், பண்... தர் சுப்பிரமணியம் ஆ... யோரும் பேசினர்.

திரு. R. N. சிவப்பிர... சம் அவர்கள் கொழும்... நடந்த அட்டூழியங்களை... பலமாகக் கண்டிக்கின்ற... என்றும் சாத்வீகச் சத்... யாக்கிரகம்சனநாயகமுல... ஆதலால் அதை அரசா... கம் தடுத்தது அடாதெ... றும், இந்த ஆபத்து வே... யிற் கட்சிகளும் தலைவ... ளும் ஒன்று சேர்ந்து ஒ... முகமாய் உழைத்தல் வே... டும் என்றும் மாபெருங்கூ... டம் கருதுவதாகப் பி... ரேரணைகள் கொண்டுவந்தா... இவற்றை மேற்சபை அ... கத்தவர் திரு. பொ. நா... லிங்கம் அவர்கள் அ... தித்தனர்.

திருச்சிற்றம்பலம்.
ழ்க அந்தணர் வானவர் ஆனினம்
ழ்க தண்புனல் வேந்தனுமோங் [குக
ழ்க தீயதெல்லாம் அர னாமமே
ழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்.

# இந்துசாதனம்

ழ். துர்முகி ஹூ வைகாசி மீ
உசூ வ வெள்ளிக்கிழமை

## கயவர் கையிலா...!

கொழும்புமாநகரிற்பாரா
மன்றத்துக்கணித்தாக
ள்ள காலிமுக முன்றி
ன் பரிபாலனம் கயவர்.
ள்வர், கட்டு மீறியவர்கள்
கயில் விடப்பட்டிருக்கி
தா; அங்கு சாந்த முறை
லே சத்தியாக்கிரகஞ்
சய்தவர்களும் வழமை
மயான உரிமைப்படி வழி
டந்தவர்களும் காற்று
ரங்கச் சென்றவர்களும்
ழிக்கஞ்சாப் பாதகர்களி
ம் பலியிடக் கைவிடப்பட்
வர்களா என்ற இந்த
ரு கேள்விகளுக்கும் அர
ாங்கம் மறுமொழி அளி
க முடியாது அவலப்படு
ன்ற தென்பதைப் பிரத
ர் பாராளுமன்றத்திலும்
வறு இடங்களிலும் கொடு
க உப்புப் புளியற்ற
ரைகள் உணர்த்துகின்
ன. மக்கள் ஆட்சியாம்!
நகரத்தில் மக்கள் சபை
ன்றத்தின் புறத்தில்
னிதகுலம் தலைகுனிந்து
ற்கும் வகையில் மாபாதக
வறியாட்டமாம்.

சத்தியாக்கிரகிகள் காலி
க முன்றிலிலிருந்துவிரதம்
நுட்டிக்கமுடியாதென்று
ட மிருக்கின்றதா?
ன்றி அவர்களை அட்டுழி
த்துக்குள் ஆளாக்கப்படு
தற்கு வெறியர்களும்
ணர்களும் குறும்பர்களும்
காமையர்களும் தனி
ரிமை பெற்றிருக்கின்றார்
ளா?

உண்ணாவிரதமிருந்து
ண்மை நெறியில் உயர்
பண்பாட்டு முறையில்
ந்த சத்தியாக்கிரகத்
கப் பேடித்தனமாகவும்,
ன்மூடித்தனமாகவும்
னவெறி மதவெறி பிடி
த பித்தர்கள் தாககின
க்கம் தமிழகத்தில் மட்டு
லை தமிழ்பேசும் இனத்
ம் மட்டுமல்ல மனித குலத்
ன்மீது படிந்த ஒரு தாக்க
கும்.

கண்டிப்பதற்காகக் கண்
ஞ் செய்கின்றோம் அல்
ம். உதைபட்டு உடம்
ல் ஊறுபட்டு எது வரி
ம் எதிர்ப்புக் காட்டாது
ன்னு செய்தாருக்கு
ன்னு செய்யாத தமிழகச்
ல்பின்படி கொள்ளைக்
ட்டத்தின் முன் இருந்த
இருந்த சத்தியாக்கிரகி
ளப் பிரதமராவது மக்
ர ஆட்சி நடத்தும் மற்
றய மந்திரிகளாவது
ஙிக்கக் கட்சி அங்கத்த
களாவது கண்டு அநு

தாபங் காட்டினர்களா? பாடிகாவலருக்கும் அப்பாற்பட்டு விட்டது குறும்பர்களின் அட்டூழியம் என்று பிரதமர் கூறிவிட்டு அரசு நடத்தும் பொறுப்பைத் தம்மால் இனிமேல் நடத்த முடியாது என்று சொல்லிவிட்டு விலகிவிடுவதுதான் திரு. பண்டாரநாயகவும் அவரின் கட்சியாரும் செய்யக்கூடியது:

தமிழ்பேசும் மக்களுக்கும் சிங்களம் பேசும் மக்களுக்கும் சொந்தமாகிய இந்த நாட்டிலே மனிதப் பண்பாடு மறைந்துவிட்டது. மிருகத் தனமான மிலேச்சத் தன்மையான வீணர்களின் பழிபாதகம் தடை கடந்து தலை எடுத்துவிட்டதென்ற நிலைமையை மக்கள் பார்த்துக்கொண்டு வாளா இருக்க மாட்டார்கள். அரசியல் பிழைத்துவிட்டால்அதற்கு அறம் கூற்றமாகு மென்பது, மக்கள் எழுந்துநின்று அறத்தை நிலை நாட்டுவார்கள் என்பதே.

# தனிச்சிங்களச்சட்டத்துக்கு எதிர்ப்பு

———0—0———

### பதுளை சைவபரிபாலன சங்கம்

4-6-56 திங்கள் மாலை சரஸ்வதி வித்தியாசாலையில் நடைபெற்ற சைவபரிபாலன சங்க நிருவாக சபைக்கூட்டத்தில் கீழ்க்கண்ட பிரேரணை வழக்கறிஞர் திரு. ரி. பாலசிங்கத்தினால்பிரேரிக்கப்பட்டு திரு. வி. கே. காராளசிங்கத்தினால் அநுவதிக்கப்பட்டு ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

"பாராளுமன்றத்தில் ஆனி (யூன்) 5ம திகதி சமர்ப்பிக்கப்பட விருக்கும் தனிச்சிங்களச் சட்டம் இலங்கையிலே தமிழ்ப் பாஷைக்கு மாத்திரமன்றி அதன் பயனாக இந்து மதத்துக்குமே பேராபத்தை விளைத்தலாலும் ஒன்றுபட்ட கொள்கையுடைய இந்துமதம் புத்தமதம் இரண்டினதும் பிணைப்பினால் நீண்டகாலமாகப் பாதுகாக்கப்பட்டு வந்த நாட்டின் ஒற்றுமைக்குப் பங்கமேற்படுத்துவதாலும் தமிழ்ச் சாகியத்துக்கே அழிவு தேடுவதாலும் பதுளை சைவபரிபாலன சங்க நிருவாகசபை இலங்கையிலுள்ள இந்து மக்களின் சார்பாகத் தனது பலமான எதிர்ப்பைப் பிரதம மந்திரிக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறது". மேற்படி தீர்மானத்தைத் தந்திமூலம் பிரதமருக்கு அனுப்புவதெனவும் பிரதிகளை பதுளைக்குரிய பாராளுமன்ற அங்கத்தவருக்கு அனுப்புவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

### கொழும்பு விவேகானந்த சபை

தனிச்சிங்களச் சட்டதிட்டத்தை நிறைவேற்றுவதால் தமிழ் மொழி நிலை பெறுவதும் இந்துமத சமயானுட்டானமும் பாதிக்கப்படுமாகையால் அதை இலங்கையிலுள்ள இந்துக்கள் சார்பில் பலமான கண்டனத்தைத் தெரிவிக்கின்றோம் என்று கொழும்பு விவேகானந்த சபை நிருவாகசபையார் ஓர் பிரேரணை நிறைவேற்றியிருக்கின்றனராம.

### சைவபரிபாலன வித்தியாலயத்தில் பிரார்த்தனை

இன்று இவ்வூர்ப் பாடசாலையைச் சேர்ந்த பெற்றோர் ஆசிரியர் மாணவர்கள் தமிழுக்கும் சிவகளத்துக்கும் அரசாங்க கருமங்களிற் சம உரிமைஇருக்குமாறு பாராளுமன்றம் தீர்மானம் செய்வதற்கு அருள்புரியும்படி உபவாசமிருந்து பிரார்த்தனை செய்தனர். சுப்பிரமணிய சுவாமி கோவிலில் விசேட பூசை பிரார்த்தனைகள் நடந்தன. வியாவில் சைவபரிபாலன வித்தியாசாலையில் கூட்டம் நடைபெற்றது முகாமைக்காரர் திரு. இ.நாகலிங்கம், பண்டிதர் சு. இராமசாமி. திரு ஆ. விநாயகசிவம் பிள்ளை ஆசிரியர், திருமதி. சோ கமலலோசனுப்பாள் ஆசிரியை ஆகியோர் பேசினர். ஒரு நாட்டில் வழங்கும் மொழிகளில் ஒரு மொழிமாத்திரம் அரசகரும மொழியாயின, அஃதல்லாத மொழி நாளடைவில் வளர்ச்சிகுன்றி மாய்ந்துவிடு மென்றும், மொழி குன்றவே அம்மொழியை யாண்ட சமூகமும் இல்லாது போய்விடு மென்றும் இலக்கண இலக்கிய வளமுடையதும் மிகத் தொன்மையானதும் இந் நாட்டில் வேரூன்றியதுமான தமிழ் மொழிக்குக் கேடு வருவதைத் தன்மானமுள்ள தமிழன் எவனும் பார்த்துக்கொண்டிருக்கக் கூடாதென்றும் சிங்களப் அரசாங்க மொழியாகத் தனித்து வழங்குவதை, சாத்தியமான வழியிலெல்லாம் எதிர்க்க வேண்டு மென்றும் ஒவ்வொருவரும் கடவுள் நம்பிக்கையுடன் தொண்டாற்றினல் இது கைகூடுமென்றும் பேச்சாளர்கள் கூறினர் பின் பிரார்த்தனை நடைபெற்றது.

### யாழ்ப்பாண மக்கள் சபையில்

"தனிச்சிங்களச் சட்டத்தை" எதிர்த்து இம்மாதம் 4-ம் திகதி திங்கட்கிழமை நாவலர் மன்றத்தில் "யாழ்ப்பாண மக்கள் சபை' ஆதரவில் தேச ஊழியன் திரு. நா. சேனதிராசா தலைமையில் ஒரு மாபெருங் கூட்டம் நடைபெற்றது.

ஆதிகாலந் தொட்டுத் தமிழரும் சிங்களவரும் இந்நாட்டிலே சகோதரர்களாக வாழ்ந்து வருகிறார்கள். தமிழர்கள் தங்கள் உரிமையை இந்நாட்டில் நிலைநிறுத்தியிருக்கிறார்கள் என்பதற்குச் சரித்திர நூல்கள் சான்று பகரும். தமிழ் மொழி ஒரு தனிப்பட்ட பெருமைவாய்ந்தது. தொல்காப்பியம் திருக்குறள் போன்ற தமிழ் நூல்கள் தமிழின் பண்பாட்டை மிகத் தெளிவாக நிரூபித்துக் காட்டுகின்றன. தமிழர்கள் பல துறைகளிலும் சகல முன்னேற்றமும் அடைந்தவர்கள். இன்று நம்நாட்டிலுள்ள பெரும் பான்மையான சிங்கள மக்கள் இலங்கை தங்களுக்கேயுரிய தென்ற மனப்பான்பான்மையுடன் சிறுபான்மை மக்களைப் பலவழியிலும் நசுக்கி ஒடுக்கி வருகிறார்கள்.

இந்நாட்டிலேயுள்ள தமிழ் மக்கள் மிகவும் சிறுபான்மையினர். ஆனல் இவ்வுலகின்கண் 800 இலட்சந் தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஆதலால் இந்த நயவஞ்சகச் சிங்கள மக்களால் தமிழரும், தமிழ்மொழியும், தமிழ் நாடும் ஒருபோதும் அழிக்கப்படப்போவதில்லை. சிங்களமக்களின் ஆட்சி சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பற்ற முறையிலிருப்பதால் உண்மையான சனநாயகம் இந்நாட்டில் இல்லை.

இப்பொழுதுள்ள பாராளுமன்றம் ஒரு கேலிக் கூத்தாடும் மன்றம். அன்றைய ஆங்கில ஆட்சிக்குப்பதிலாக இன்றுசிங்கள ஆட்சி நிலவி வருகின்றது. தன்மானமுள்ள தமிழர்களாகியநாங்கள் ஆண்—பெண் என்ற பேதமின்றி மிகவுறுதியான உள்ளத்துடன் "தனிச்சிங்களச் சட்டத்தை" எதிர்த்துப் போராடவேண்டும்

அடுத்ததாகச் சங்கானைக் கிராமச்சங்கத் தலைவர் திரு. சு. கந்தசாமி அவர்களும் கருணையூர் செல்வன் ச. பெரியதம்பி அவர்களும் சொற்பொழிவாற்றினர்கள். பின்வரும் பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது.

சிங்களத்துடன் தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்குமாறு இச்சபை கனம் பிரதம மந்திரி எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டார நாயக்கா அவர்களை வேண்டுகிறது. அப்படிக் கொடாவிட்டால் தனிச்சிங்களச் சட்டத்தை இச்சபை முழுதாய் எதிர்க்கிறது.

———

### திருக்கோணமலையில் தமிழ்ச்சர்வகலாசாலை

திருக்கோணமலையிலுள்ள கடற்படைஞரின் கட்டிடங்களில் ஓர் தமிழ்ச்சர்வகலாசாலை அமைக்குமாறு அரசாங்கத்தைக் கேட்கும் பிரேரணை ஒன்று பிரேரிப்பதற்கு யாழ்ப்பாண நகரசபையில் அதன் அங்கத்தவர் முதலியார் சி. முத்துத்தம்பி அவர்கள் முன் அறிவித்தல் கொடுத்திருக்கின்றாராம்.

———

### மட்டக்களப்பில் பொதுக் கூட்டம்

———

மட்டக்கிளப்பில் நடந்த பொதுக்கூட்ட மொன்றில் தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்தும் தமிழுக்குச் சம அந்தஸ்துக் கொடுக்கப்பட வேண்டு மென்றும் இரு பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன.

### அகில இலங்கைத் தமிழ் ஆசிரியசங்கம்

———

கண்டி சைவமகாசபை மண்டபத்தில் நடந்த அகில இலங்கைத் தமிழ் ஆசிரிய சங்கத்தில் தனிச்சிங்களச் சட்டம் சனநாயகத்துக்கு மாறானது என்று கண்டித்தும், தமிழையும் அரசகரும மொழியாக்கும்படியும் சர்வகலாசாலையில் தமிழ்போதனை மொழியாக்கும்படியும் 5-6-56ல் உபவாசமிருக்கும்படியும் மாதத்தில் ஒருநாள் சம்பளம் தமிழ்ப்பாதுகாப்பு நிதிக்குக் கொடுபடவேண்டு மென்றும், தமிழ்ப்பாடசாலைகளில் சிங்களம் படிப்பிக்கக்கூடாதென்றும், ஆசிரியர்கள் சிங்களம் கற்கக்கூடாதென்றும் பிரேரணைகள் நிறைவேற்றப் பட்டன.

———

### கம்பளையில் சிங்களம் நிராகரிக்கப்பட்டது

———

கம்பளைப் பட்டினசங்க விசேடகூட்டமொன்று தலைவர் ஸ்ரீ ஆர். எஸ். பெல்பொல தலைமையில் நடைபெற்றது. அத் தருணம் தனிச்சிங்களத்தில் எல்லாம் செய்தற்குஒழுங்கு செய்யவேண்டு மென்று ஸ்ரீ ஹேகரர் விஜயதுங்க கூறினார். இது விவாதிக்கப்பட்ட பின் ஆங்கிலத்திலேயே கருமங்கள் நடத்துவதென்றும் கடிதங்கள் எந்தெந்த மொழியில் வருகின்றனவோ அந்தந்த மொழியில் மறுமொழி எழுதுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

———

### தனிச் சிங்களத்துக்கு யாழ்ப்பாணச்சட்டத் துறையினரின் எதிர்ப்பு

———

யாழ்ப்பாணச் சட்ட அறிஞர் கூட்டமொன்று நியாயவாதி ஸ்ரீ சி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது. பின்வரும் பிரேரணைகள் அக்கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டன.

(1) தனிச்சிங்களச்சட்டம் நீதியீனமானதும் சனநாயகத்துக்கு முரண்பட்டதாயுமிருப்பதோடு தமிழ்மக்களின் பிறப்புரிமையைத் தாக்குவதாய் நாட்டு மக்களின் ஒற்றுமையையும் கெடுப்பதாகும.

(2) இந்நாட்டுத் தமிழ் மக்களின் இன, மொழி, பண்பாடு என்பவற்றை அழிப்பதாக உள்ளதாகும்.

(3) இச் சட்டம் தமிழ் மக்களால் எதிர்க்கப்படும். அதில் யாழ்ப்பாணச் சட்டத் துறையினர் பங்குபற்றி உதவி புரிவார்கள்.

(4) இச் சட்டத்தின் ஆட்சி இலங்கை முழுதும் பொதுவாகவும் தமிழ் மக்களுக்குக் குறிப்பாகவும் நீதித் துறையில் தீமை விளைக்கும்.

(5) தமிழுக்கு இலங்கை முழுதும சமஅந்தஸ்துக்கொடுக்குவரையில் யாழ்ப்பாணம் சட்ட அறிஞர் சங்கம் சிங்களச் சட்ட ஆட்சியில் ஒத்துழைக்கமாட்டாது.

# காகபுசுண்டர் குறிப்பிட்ட கிரக மாற்றங்கள்

—0—0—

## இக்கால இயற்கைக்கு ஒக்கின்றன

(முற்றெடர்)

1955ம் ஆண்டு தோன்றிய சூரிய கிரகணத்தின் போது அரசியலார் எடுத்துக் கொண்ட முன்னேற்பாடுகள் யாவரும் அறிந்ததே. தற்காலம் கிடைத்துள்ள இந்திய சாசனங்களில் கி. பி. 8ம் நூற்றூண்டுக்கும் 16ம் நூற்றூண்டுக்குமிடையிலே தோன்றிய கிரகணங்களை அறியக்கூடியதாயிருக்கிறது. சாளுக்கிய அரசன் 2ம் கீர்த்திவர்மன் காலத்தில் (746 - 757 A. D.) பூரணசூரிய கிரகணம் தோன்றியது. சகவருடம் 677ல் (25 th of June 754 A. D.) இரண்டாவதாக, இராஸ்டிரகுத்த அரசன் 3ம் கோவிந்தன் (793-814 A. D) காலத்தில் சூரிய கிரகணம் தோன்றியது. சாசனத்தில் சரியான நேரத்தையும் குறிக்கப்பட்டுள்ளது. அதாவது (சக வருடம் 716ல்) (ஆங்கிலத்துக்கு கி. பி. 794ம் ஆண்டு மே மாதம் 4ம் திகதி காலை சூரியன் உதித்து 3 மணி 48 மினிற்றில்- 9 மணி 48 மினிற்றில் சூரிய கிரகணம் தோன்றியது. மூன்றுவதாக யாதவஅரசன் பில்லமாதவன் காலத்தில் (சக வருடம் 1113) கி. பி. 1191ம் ஆண்டு (யூன்) மாதம் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி 29 நிமிஷமளவில் சூரிய கிரகணம் தோன்றியது. நான்காவதாக, சக வருடம் 1478-ல் விஜய நகர அரசன் சதாசிவராயன்காலத்தில் (1542 -1570 A. D) ஒருசூரிய கிரகணம் (ஆங்கிலத்திற்கு 1556ம் ஆண்டு நவம்பர் மாதம் 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தோன்றியது. (இதோடு விஜயநகர சக்கராபத்தியம் அழிவுற்றது.) மேற்கூறிய ஒவ்வொரு கிரகணத்தன்றும் அரசர்கள் கோயில்களுக்கு நிலத்தைத் தருமமாகக் கொடுத்துள்ளனர்.

காகபுசுண்டர் என்பவர் தமிழ் நாட்டுச்சித்தர். அவர் தாம் இயற்றிய பெருநூல் காவியம் என்னும் நூலில் அநேக மாற்றங்களைக் குறிப்பிடுகிறூர். "கலியுகத்தின் 5059ல் சந்திரனின் வளர்வும் தேய்வும் மாறிவிடும். ஒருமாதத்தில் 33ம் நாள்களும் ஒருநாளில் 10 சாமமும் இருக்கும் பூமி சுழன்றுகொண்டே தன்மையத்தை மாற்றும். சூரியன் முதலிய கிரகங்கள் தம் பாதையை மாற்றிக் கொள்ளும். புதனும் சுக்கிரனும் உபக்கிரகங்களாகப் பூமியைச் சுற்றும். பூமியின் துருவம் மாற்றப்படும். சில இடங்கள் தாழும். சில இடங்கள் நீருக்குமேல் தோன்றும். இம் மாற்றங்கள் ஏற்படும்போது புதிய கிரகங்கள தோன்றும்.

"விந்தையாய் யானுரைக்க இரக
பாவம் விவரிப்பேன்
ஆதிமுதல் சமரசர்க்கு சிந்தையே
கவியும பின் புவியனுேடு
செப்புவேன் மதியோடு முருகந்
தானே;
'முருகனுக் கடுத்தவன் தான் வீர
னென்று மொழிகுவேன்
அதன்பின் அரக்கனய்யா பெருக்
கனுக் கடுத்தவன் தான்
குணனு
மென்ன பேசுவே னதை யடுத்
தோன் தியானியம்மா,
அருகனுக்
கடுத்தவன் தான் காரியென்று
அறைகுவே னதன்பின்னே
கண்டகந்தான் வருகவும் கடுத்
தவத்தை சமரசத்தால்
வையத்தில் நிலைநாட்டிப் பலனும்
பாரே,
'பலனும்பார் ஆகியந்தன் திசைக்
காரு பகருவேன்
சிந்தை கண்டவர்க்கு மேழு கல
னில்லா கவிதருமத்தெட்டு
மென்று கழறுவேன் மதியொடு
குருவுக் கொன்பான்
புலனறிய தியானியே,
தரணி பத்தும் புகழ்பெற செய்
குணம் பதினென் றென்று
சுலபமே பெருகவும் வீரன்பத்தீர்
குட்டினனே னறக்கனுக்கு
பதினு லாண்டே"

காகபுசண்டரின் மேற்கூறிய காவியத்தின்படி பதினைந்து கோள்கள் வருங்காலத்தில் தோன்றும்.

| கோள்கள் | ஆண்டு | | கோள்கள் | ஆண்டு |
|---|---|---|---|---|
| ஞாயிறு | — 6 | | தியானி | — 10 |
| சமரசன் | — 6 | | பூமி | — 10 |
| புதன் | — 7 | 15 கோள்களுக்கும் | சேய் | — 11 |
| கந்தகன் | — 7 | மொத்த ஆண்டுகள் | குணன் | — 11 |
| வெள்ளி | — 8 | 140. | பெருககன் | — 12 |
| சனி | — 8 | | வீரன் | — 12 |
| சந்திரன் | — 9 | | அரக்கன் | — 14 |
| வியாழன் | — 9 | | | |

இது மட்டுமல்ல. சுமத்திரா, யாவா, போனியோ முதலிய தீவுகளில் பூமி நடுக்கம் உண்டாகும். கண்டி நீரில் மறையும்.

கண்டியேனும் திட்டுத்தானே
யமுந்திப் பின்னில்
கமலனவர் முறையாலே
பரத மொட்ட
புகழாகும் கண்ட மேழ்பிரிவு
மாகி
அகத்தினில் இருப்பதினை
மாற்றுதற்கு
ஆற்றேரு புவியுண்டு அதனில்
கூட
சுகத்தினைச் செய்யவோ பதி
யின் உத்திரம்"

என்பனபோன்ற அநேக மாற்றங்களைக் குறித்துள்ளார். பூமியின் சமீபமாக ஓர் வால் வெள்ளி தோன்றுமென்றும்அதன்பின்பே இம் மாற்றங்கள் ஏற்படுமென்றும் கூறியுள்ளார். பெருநூல் காவியம் - Published in 1934 by E Ru Guruswamy Konar Son Bookshop, Puda Mandapam, Madura) ஒருவால் வெள்ளி பூமியில் மோதினுல் அல்லது பூமிக்குச் சமீபமாகச் சென்றுல் பூமியின் அமைப்பிலும் மற்றும் விதங்களிலும் மாற்றங்கள் ஏற்படும் என்று தற்கால வானநூலறிஞர் கருதுகின்றனர். காகபுசுண்டரின் கணக்குப்படி கலி 5059 தொடக்கம் இம் மாற்றங்கள் தொடங்க வேண்டும். இப்பொழுது கலியுகம் 5057 நடக்கிறது. நம் முன்னேர் உலகை அண்டம். பிரமாண்டம் (முட்டையின் வடிவம் போன்றது)என்றனர். 20ம்

**திரு. ப. இ. தேவராசா**
**கொழும்பு**

நூற்றூண்டு விஞ்ஞானப் பேராசிரியர் ஐன்ஸ்டைன் "இது ஒரு நிலையான சிற்ப வேலைப்பாடில்லாத ஒழுங்கற்ற தொடர்பானஉருவம். வேறு உருவாக்கத் தக்கதும், மாற்றமடையத் தக்கதும் ஆனது. அடிக்கடி மாற்றத்திற்கும் சீர்குலைதலுக்கும் ஆளானது. இவ்வுலகம் விரிவடையக் கூடியது" என்றூர். ஐன்ஸ்டைன் கூறிய கருத்துக்களைப் பலநூற்றூண்டுகளுக்கு முன் நம்முன்னேர் கூறிய அறிவின் ஆற்றலைவியக்காமலிருக்கமுடியாது.

1954 - ம் ஆண்டு ஒக்ஸ்போர்ட்டில் கூடிய பிரித்தானிய சங்கக்கூட்டத்தில் பேராசிரியர் பி. எஸ். பிளாக்கெட் என்பவர் துருவங்கள் காலத்திற்குக் காலம் வடக்கிருந்து தெற்காக மாற்றம் அடைவதென்றும் தமக்குக் கிடைத்துள்ள சான்றுகள் அதை நிருபிக்கிறதென்றும், கடந்த 30,000,000 வருடங்களில் பத்து இலட்சம் ஆண்டுகளுக்கொரு முறை மாறியுள்ளதென்றும் கூறியுள்ளார். 1950 ல் அசாமில் உண்டான பூகம்பம் அபோர் மலையை மட்டப்படுத்திவிட்டது. ஆறுகளின் வழிகளை மாற்றி அமைத்தது. 1954ம் ஆண்டு (செப்டெம்பர்) மாதம் அல்ஜீயர்சில் உண்டான பூமி நடுக்கம், நியுசிலாந்தில் எரிமலை அக்கினிப் பிளம்பைக் கக்கியமை யப்பானில்வீசிய கொடிய சூருவளி முதலியன காகபுசுண்டரின்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

---

திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்

# குருபூசை விழா

—:0:—

**திருஞானசம்பந்தசுவாமிகள் ஆதீனம் — மதுரை**

மதுரை திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனத்தில் சென்ற வியாழக்கிழமை வெள்ளிக்கிழமைகளில் முறையே விநாயக வழிபாடு முருகவழிபாடுகளுடன் திருஞான சம்பந்த மூர்த்திநாயனுர் குருபூசை ஆரம்பமாகி ஞாயிற்றுக்கிழமை இரவு வரையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. சுவாமிகளின் திருவவதாரம், ஞானப்பாலுண்டல், சிவசோதியிற் கலத்தல் முதலிய காட்சிகளுடன் சொற்பொழிவுகள், இன்னிசைகள் என்பனவும் நிகழ்ச்சிகளில் இடம்பெற்றன. ——

**தெல்லிப்பழை பாலர் ஞானேதயசபை**

மேற்படி குருபூசை வைகாசிமீ 14உ (27-5-56) ஞாயிற்றுக்கிழமை மாலை பாலர் ஞானேதய சபையாரால், திரு. எம். எஸ். சி… பரப்பிள்ளை அவர்கள் த… மையில் காசி விநாயக… லய மண்டபத்தில் கொ… டாடப்பட்டது.

விசேட ஆராதனைக… நடைபெற்ற பின் கூட்… பிரார்த்தனை நடைபெற்… கூட்டம் ஆரம்பமாய… தலைவர் பேசும்போது சி… வர்கள் ஆர்வத்துட… கொண்டாட வேண்டிய… சம்பந்தப் பெருமானி… குருபூசையே யென்று… சம்பந்தப்பெருமான் இ… மையிலேயே இறையரு… பெற்றவரென்றும் அவர… தேவாரப் பதிகங்கள் ஒ… வொன்றும் எமக்கு அ… மருந்தாக அமைந்துள்ள… வென்றும் குறிப்பிட்டா… அதன்மேல் செல்வன்… சிவானந்தராசா "நாய… ரின்அற்புதங்கள்" என்ப… பற்றியும் செல்வி சி. சி… னம்மா "சம்பந்தரி… இளமை"என்னும் பொரு… பற்றியும் பேசினுர்கள்.

———

---


# தஞ்சை வாணன் கோவை
## சொக்கப்ப நாவலர் உரை

பொய்யாமொழிப்புலவர் பாடிய **தஞ்சைவாணன் கோவைக்குப்** பேர் பெற்ற பழைய உரையாகிய குன்றத்தூர் - அஷ்டாவதானி சொக்கப்ப நாவலர் உரை வித்துவான் ந. சுப்பையபிள்ளை அவர்களின் குறிப்புரையுடன் யாழ். சைவபரிபாலனசபையார் வெளியிட்ட முதலாம் பதிப்பினைப் பலர் அறிவர். அதனை, பின்னர்க் கிடைத்த ஏட்டுப் பிரதிகொண்டு பரிசோதிப்பித்துத் திருத்தப் பதிப்பாக இப்போது வெளியிட்டிருக்கின்றனர். அது தமிழிலக்கண இலக்கியங் கற்போருக்கும், யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கப் பாலபண்டித பரீட்சை, மதுரைத் தமிழ்ச் சங்கப் பால பண்டித பரீட்சை, சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் பரீட்சை, அண்ணமலைப் பல்கலைக்கழகப் புலவர் பரீட்சை ஆதியவற்றிற்குக் கற்கும் பரீட்சார்த்திகளுக்கும் பெரிதும் பயன்படக்கூடியது, நாற்கவிராஜ நம்பியகப் பொருளுரையில் இக்கோவைச் செய்யுள் முழுவதும் உதாரணமாகக் காட்டப்பட்டிருத்தலின், அவ் விலக்கணங் கற்போருக்கும் பெரிதும் பயன்படுவதாகும் என்பது சொல்லாமலே விளங்கும்.

மாணிக்கவாசக சுவாமிகள் பாடியருளிய திருச்சிற்றம்பலக் கோவைக்கு அடுத்தபடியாக முதன்மை பெற்று அறிஞராற் பாராட்டப்படுவது தஞ்சைவாணன் கோவையே. அதற்குச் சொக்கப்பநாவலர் இயற்றிய உரை அகப்பொருட்டுறைக் கருத்துக்களையும் பிறவற்றையும் தெள்ளிதின் விளக்குந் தன்மைவாய்ந்து, அக்கோவைக்கு ஓர் அணிகலன்போலத் திகழ்வது என்பது அறிஞர்கருத்து. அங்ஙனஞ் சிறந்து விளங்கும் அக்கோவையின் செய்யுட் கருத்து உரைக் கருததுக்களை மயக்கமற இலகுவாக விளங்கிக் கற்றற்குச் சாதகமாக வித்துவான் அவர்கள் எழுதிய குறிப்புரை பரீட்சார்த்திகளுக்கும் ஏனையோர்க்கும் பெரிதும் பயன்தரத் தக்கது என்பது இதன் முதற்பதிப்பினுல் அறியக் கூடிய தொன்ருகும்.

இப் புத்தகம் பெறவிரும்புவோர் எம்மிடத்தும், பிரபல புத்தக வியாபார ஸ்தலங்களிலும் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாகும்.

**விலை ரூபா : 6 - 00.** வியாபாரிகளும், தொகையாக வாங்குவோரும் உரிய கழிவுடன் விலைக்குப் பெறலாம்.

**மனேஜர்,**
சைவப்பிரகாச யந்திரசாலை,
யாழ்ப்பாணம்.

# "அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறைவெல்ல"

# திருக்கேதீச்சரத்துக்குச் செந்தமிழ்த் தொண்டர் பாதயாத்திரை

சந்தமிழ்ச் சிவநெறி ங்கும் தமிழ்நாட்டிலே வத்தையும் தமிழையும் ர்க்கக்காலத்துக் காலம் பப் பெரியார்கள் ான்றியுள்ளார்கள். நானம் தோன்றிச் வத்தையும் தமிழையும் ர்த்த பெருமக்கள் மணி சகர், ஞானசம்பந்தர், பர் சுந்தரர் முதலியோ வர். இவர்கள் மக்கள் ஞ்ஞான இருளிலிருந்து ய்ஞ்ஞானத்தை அடை பொருட்டு திருத்தொண் டியே தங்கள் பணியாகக் ாண்டு திருவருள் நெறி ாறு தமிழ் நாட்டிலுள்ள ங்களையெல்லாம் பாத த்திரை செய்து தரிசி அருட்பாமாலைகளால் மபதியாகிய இறைவனை றைஞ்சினர்கள்.

இவர்களுக்குப்பின் தமிழ் ட்டிலே ஐந்தாங் குருபர அவதரித்த ஈழநாட்டுப் ல்வர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக வலப் பெருந்தகையார் ல்வர் பெருமக்கள் வழி ன்று அவர்கள் தரிசித்த ங்களையெல்லாம் தம்பிர சீடரான ஸ்ரீமத் சதா வம்பிள்ளையவர்களோடு த்திரை செய்து தரிசித் ர்கள். அதன் பயனாக வர்வழிநின்று பல பெரு கள் தமிழ்நாட்டில் யாத் ரை செய்துள்ளார்கள். துவுமல்லாமல் தற்போது நாட்டிலிருந்து சிலர் வட ந்தியாவிலுள்ள கரித் வாரம், இருஷிகேஸ்வ முதலாய இடங்கட்கும் த்திரை செய்திருக்கிறார் ள். கதிர்காமம், திருக்கே ச்சரம் முதலான தலங்க க்குப் பாதயாத்திரை சய்ததாகக் காலங்கண்ட தியோர்கள் எம்மனோர்க் க் கூறிப்போந்தனர்.

யாத்திரை யென்பது றைவன் திருவடிகளை டைவதற்காக ஆன்மாக் ள் வழிநடையாய் யாத் ரை செய்தல். அதுபோ த் திருப்பாத யாத்திரை ாரர்களாகிய நாம் எல் ாரும் ஒருவரோடொருவர் தியாயும் அன்பாயும்வாழு ல் வேண்டும். சிவஞானத் க்கு கடவுளுடைய திரு டிகள் என்று பெயர்.

நாவலர் பெருமான் சய்த திருக்கேதீச்சர ாத்திரையைச் சைவமக் ள் தொடர்ந்து செய்ய வண்டுமென, அவர் வழி ற்கும் திரு. மு. ஞானப் ரகாசம் அவர்கள் இந்த ாத்திரை விஷயமாய் முன் ந்தமை திருவருட்செயலா ம்.

இந்த யாத்திரையையாழ் பாணத்தில் செய்வதற்கு முன் திருப்பெருந்துறை, ருவுத்தரகோசமங்கை முதலான தலங்களிலிருந்து பாதயாத்திரையாகச் சிதம்பரம் சென்று பின் ஈழநாட்டில் பாதயாத்திரை செய்வதாகத் தீர்மானம் செய்யப்பட்டிருந்தது. இக்கால நிலைமை நெருக்கடியாய் இருத்தலினால் தமிழ் நாட்டு யாத்திரையை விடுத்து யாழ்ப்பாணத் தலங்களைச் சுற்றி யாத்திரை செய்வதாகப் பேராசிரியர் திரு. ஞானப்பிரகாசம்பிள்ளையவர்கள் கூறினர்.

நிகழும் வைகாசித் திங்கள் விசாகநாளில் ஆசிரியர்களும் மாணவர்களுமாகப் பாதயாத்திரைக்கு பன்னிருவர் முன்வந்துள்ளனர்.

---

எழுதியவர் :

**சே. கோவிந்தசாமி அவர்கள்**

---

அவர்களுடன் விசாகத் தினமாகிய புதன்கிழமை 5 மணியளவில் நல்லூர்க்கந்த சுவாமிகோயிலில் வழிபாடு செய்துசிவநாமகீதத்துடன் புறப்பட ஆயத்தமுற்றோம்.

இந்துசாதனப் பத்திராதிபர் திரு. நம சிவப்பிரகாசம் அவர்கள் நல்லாசிகூறி எங்களை வழியனுப்பினர். அதன்பிரகாரமாய் நாங்கள் பன்னிருவரும் வீதி வலம் வந்து கிழக்கு முகமாகச் செல்லும் வழியால் 12 மைல் தூரம் நடந்து இரவு எட்டரை மணியளவில் தனங்கிளப்பு என்னும் கிராமத்தை அடைந்தோம். அங்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் பரம்பரையில் தங்காமணி விளக்காய் மிளிரும் பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளையவர்கள் எங்களைக் காத்திருந்து வரவேற்றுத் தம் ஆச்சிரமத்துக்கு அழைத்தனர்.

இவ்வரவேற்பு ஞானசம்பந்த சுவாமிகள், அப்பர் சுவாமிகள் ஒருவருக்கொருவர் சீர்காழி திருப்பூந்துருத்தி முதலிய தலங்களில் சந்திக்கும் காட்சிபோலிருந்தது. பண்டிதர்ஐயா அவர்கள் தமது ஆத்மீக தலமாகிய புராதீன மகாகணபதிப்பிள்ளையார் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு விசேட தீபாராதனை பூசைகள் நடைபெற்றன. அதனையும் தரிசித்தோம். பின் சேக்கிழார் பெருமான் சம்பந்தரைப்பற்றியருளிய "வேத நெறி தழைத்தோங்க" என்ற செய்யுளுக்கு கேட்போர் பக்திபரவசமடையுமாறு பண்டிதர் அவர்கள் ஒரு விளக்கவுரை நிகழ்த்திச் சைவசித்தாந்தத் தேனமுதையும் எங்களுக்கு ஊட்டினார்கள். அத்துடன் தக்க போசனதிகள் தந்து பாடசாலையில் துயிலச் செய்தனர். பின் நான்கு மணியளவில் நித்திரை விட்டெழுந்து எங்கள் கடமைகளை முடித்தோம். அதன்பின் பண்டிதர் அவர்களும் எங்களுடன் விரைவாக 1 மைல் தூரம் நடந்து அங்கும் ஒரு பிள்ளையார் கோயிலுக்கு அழைத்துச் சென்று வழிபாடு செய்தபின் திருவருட் சம்மதத்தோடு வழியனுப்பினார்.

வியாழக்கிழமை காலை 10 மணியளவில் 10 மைல் தூரம் நடந்து பூநகரிப் பிள்ளையார் கோவிலை அடைந்தோம். அங்கும் வழிபாடு செய்து போனகமருந்திப் பின் மாலை நாலுமணிக்குப் புறப்பட்டோம். இருமருங்கும் அடர்ந்த சோலைக்காடு, வனவிலங்கு சஞ்சாரம், கரடுமுரடான பாதை, கேதீஸ்வரநாதர் திருவடிகளையே சிந்தித்துக்கொண்டு 17 மைல் நடந்து இரவு 10மணியளவில் பல்லவராயன்கட்டைச் சேர்ந்தோம். பின் அங்கிருந்து காலை வெள்ளிக்கிழமை ஐந்து மணிக்கு பெருங்காடுகட்கு ஊடாகச் சென்று 4 மைல் தூரத்திலுள்ள முளங்காவில் பிள்ளையார் கோவிலை அடைந்தோம். அங்கு ஒரு அடியவர் அந்த நடுக்காட்டில் வழி தெரியாதோருக்கு வழிகாட்டுவது போலிருந்து விநாயகருக்குப் பூசை செய்கிறார். சிறிதுநேரம் அவ்வடியவரோடு சம்பாஷித்துக்கொண்டு விநாயகப் பெருமானை வணங்கித் தோத்திரம் செய்தோம். பின் சிறிதுநேரம் இளைப்பாறி நான்கு மைல் நடந்து வெள்ளாங்குளம் பிள்ளையார் கோவிலையடைந்தோம். அங்கும் ஒரு அன்பர் எங்களை வரவேற்று உபசரித்து வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு வழியனுப்பினர். அந்நேரத்தில் எங்கள் பத்திராதிபர் திரு. நம. சிவப்பிரகாசம் அவர்களும் அவர் புதல்வரும் மாணவருமாகிய கெங்காதரனும் விசைவண்டியில் வந்து சந்தித்து பாதயாத்திரை செய்யத் தொடங்கினர். இந்த யாத்திரையில் பள்ளி மாணவர்கள் சிலர் கலந்து கொண்டமையும் இக்கால நாத்தீக மாணவர்களுக்கு ஒரு முன்மாதிரியாகும். இங்ஙனம் 8 மைல் தூரம் சோலைக்காடுகள், ஆறு, குளம், திடல், பள்ளம் முதலியன கடந்து இலுப்பைக் கடவையைச் சேர்ந்தோம். அன்று இரவு அங்கு தங்கிப் பின் காலை 5 மணிக்குப் புறப்பட்டு எல்லாரும் ஒரே வேகமாய் நடந்து கேதீஸ்வரநாதர் தேவாரங்களைப் பாடிக்கொண்டு 15 மைல் தூரம் நடந்து சனி பகல் 11 மணியளவில் மாந்தைச் சந்தியையடைந்தோம். அங்கு திருக்கேதீச்சரத் திருப்பணிக் காரிய தரிசியும் சைவப் பெரியாருமாகிய திரு. சு. சிவசுப்பிரமணியம் அவர்கள் மேள வாத்திய கோஷத்தோடு வரவேற்று அழைத்து வீதி வலம் செய்து திருஞானசம்பந்தர் மடாலயத்துக்கு அழைத்துச் சென்றார்கள். பின் எல்லாரும் கேதீஸ்வர நாதரது திருவடிகளை வணங்கிப் பிரசாதம் அருந்தினார்கள். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை திருமடத்தில் மகேஸ்வரபூசை சொற்பொழிவுகள் முதலியன மிகச் சிறப்பாக நடைபெற்றன. தமிழ் மொழிக்காகச் செய்த யாத்திரை யாழ்ப்பாண நாட்டிற்கு ஒரு முன்மாதிரியாகும்.


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**616313,00**

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங்கட்டுமுறை.**

மாசமொன்று 1ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப்பற்றுவரவு.**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.**

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்.**

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்.**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறாப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.







### பிட்டியம்பதி பத்திரகாளி அம்பாள் மகா கும்பாபிடேகம்

சங்கரத்தை பிட்டியம்பதி வீரபத்திர மூர்த்திக்கும் பத்திரகாளி அம்பாளுக்கும் நிகழும் வைகாசி மீ 29 உ (11-6-56) திங்கட் கிழமை பகல் 10-48 மணிக்கும் 12-20 மணிக்குமிடையில் மகாகும்பாபிடேகம் நடைபெறுமென்றும் அன்று தொடக்கம் 45 நாட்களுக்கு அபிடேகம் நடைபெறும் என்றும் தர்மகர்த்தாக்கள் அறியத் தருகின்றனர்.

### மரண தண்டனை நீக்கத்தை மேற்சபை நிராகரித்தது

மரண கண்டனை நீக்கச் சட்டம் பிரதிநிதிகள் சபையில் ஒருவர் வாக்களிக்க 67 பேர் சாதகமாய் வாக்களித்து நிறைவேற்றப்பட்டது. மேற்சபைக்குப் போனபொழுது பத்துப் பேர் சாதகமாக வாக்களிக்கப் பன்னிருவர் பாதகமாக வாக்களித்து இதை நிராகரித்திருக்கின்றனர்.

இப்பொழுது சட்டமாக்கப்பட முடியாமலிருப்பதால் அடுத்த ஆண்டு பிரதிநிதிகள் சபையில் கூடும் பொழுது இது இரண்டாம் முறையும் நிறைவேற்றப்பட்டவுடன் சட்டமாகுமாம்.

# மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பொன்விழா 30-5-56 புதன்கிழமை ஸ்ரீ இராசகோபாலாச்சாரியர் அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது. இது ஏழு நாட்களுக்கு 5-6-56 வரையும் தொடர்ந்து நடைபெற்றது. ஈழநாட்டு அறிஞர்களாகிய சேர். கந்தையா வைத்தியநாதன், திரு. சு. நடேசன் கலைப் புலவர் கே. நவரத்தினம் ஆகியோரும் தலைமை வகித்தும் சொற்பொழிவு ஆற்றியும் பங்குபற்றினர்.

ஸ்ரீ கு. இராசகோபாலாச்சாரியார் அவர்கள் விழாவைத் திறந்து வைத்துப் பேசும்போது, அகத்தியர் கம்பர் வள்ளுவர்போன்ற புலவர்களின் பெயர்களைக் கூறி, மகிழ்ந்து அவ்வளவில் அமைந்துவிடுகின்றோம். இதற்கு முன் தமிழ்ப் புலவர்கள் உயர்ந்த குறிக்கோளையும் ஒழுக்கநெறியையும் தங்கள் நூல்களில் விளக்கிப் போந்தார்கள். இப்பொழுது பல திறப்பட்ட வழிகளில் நூல்கள் ஆக்கப்பட வேண்டிய காலம் வந்துள்ளது. அவை பக்தி, தாழ்மை ஆதியவை தோய்ந்தவையாய் ஆக்கப்படுதல் வேண்டும். இன்று வாசிப்போரின் தொகையிலும் எழுதுவோரின் தொகை கூடியதாயிருக்கின்றது. சில வெளியீடுகளை வாசித்துவிட்டுச் சிறுபிள்ளைகளே கட்டுரைகள் எழுத முற்படுகின்றார்கள் என்று குறிப்பிட்டார்.

**ஈழத்தில் தமிழ்மொழி பற்றி சேர். கந்தையா**

சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் கடைசிநாள் விழாவில் தலைமை வகித்துப் பேசும்போது தமிழ்மக்கள் இலங்கையில் செய்யும் சத்தியாக்கிரகம் தனிச் சிங்களச் சட்டத்தின் அநீதியை அரசாங்கத்துக்கு அறிவுறுத்துவதாகும் என்றும் சிங்களத்துடன் தமிழுக்கு இதுவரையும் சமவுரிமை இருந்ததென்றும் அந்நிலைமை இன்று மாற்றப் படுகின்றதென்றும் குறிப்பிட்டார்

பாராளுமன்றத்தில்.

# 'தனிச் சிங்கள'ச் சட்டம்

## தமிழ் பேசுமினத்தின் — — உரிமையை அழிக்கும்

——:o:——

நான்கு மணித்தியாலங்களாகத் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் தனிச் சிங்களச் சட்டத்தைப் பலமாகக் கண்டித்துப் பேசினார். சிறிது நேரம் தமிழிற் பேசிவிட்டுப் பின்னர் அனைவரும் தமது நியாயங்களை அறிவதற்காகப் பேச்சை ஆங்கிலத்தில் நிகழ்த்தினார்.

அதற்குமுன் செவ்வாய்க்கிழமை காலிமுக முன்றிலில் நடந்த அலங்கோல அட்டூழியங்களை எடுத்துக் கண்டனஞ் செய்தார் திரு. பொன்னம்பலம்.

திரு. கு. வன்னியசிங்கம் அவர்கள் அன்று நடந்த வெட்கக்கேடான நிகழ்ச்சிகளை அடுக்கடுக்காகச் சொல்லித் தாம் அவற்றைப் பற்றி முறைப்பாடு செய்யவில்லையென்றும் ஆனால் பொதுமக்கள் அறியவேண்டும் என்றும் கூறினர்.

## தனிச்சிங்களச்சட்டப் பற்றி — யாழ். சைவபரிபாலன சபைத் தீர்மானம்

———0———

1ம் பக்கத் தொடர்ச்சி

படுத்துவதையோ, தங்கள் மீது சிங்களவர் ஆட்சி செலுத்துவதையோ தமிழ்ப் பேசும் மக்கள் சகித்துக் கொண்டிரார்.

இலங்கைவாழ் பல்வேறு சமுகங்களிடையேயும் சமரசமும் ஒற்றுமையும் நிலவ வேண்டுமென்று இலங்கை சுதந்திரம்பெற்றநாள்முதல் இச்சபை வற்புறுத்தி வருகிறது தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களம் போதிக்கப்படவேண்டுமென்றும் சிங்களப் பகுதிகளில் தமிழ் போதிக்கப்படவேண்டும் என்றும் இச்சபை இடைவிடாது வற்புறுத்தி வந்திருக்கிறது.

தனிச் சிங்களச் சட்டதிட்டமானது நாட்டில் அமைதியின்மையையும் குழப்பத்தையுமே உண்டாக்கும். இத்திட்டம் எப்பொழுதும் தமிழ் மக்களிடையே அதிருப்தியையே உண்டாக்கிக் கொண்டிருக்கும். இறுதியில் நாடு இரு கூறுகளாகப் பிளவுபடக் கூடிய நிலையை உண்டாக்கும். அவ்விதமான நிலைமை இந்நாட்டில் வாழும் பல்வேறு சமுகத்தினருக்கும் நன்மை பயக்காது. தங்களது மொழியல்லாத வேறு மொழியை மக்களது தொண்டைக்குள் திணிக்க முயலும் எந்தச் சட்டமும் வெற்றி பெற முடியாது.

### மொழிச் சட்டம்

இலங்கையிலுள்ள சிங்கள அரசாங்கம் தனது சிங்களமொழியை இலங்கையிலுள்ள தமிழ்ப் பேசும் மக்கள்மீது திணிப்பதை இலங்கைத் தமிழ் மக்களின் சார்பில் நிராகரிக்கின்றோம். எங்கள் இனம் தொடர்ந்து வாழ்வதற்கு ஏற்பட்டுள்ள அபாயத்தையும், தமிழ் மக்களின் பண்பையும், தமிழ்மக்கள் பரம்பரையாக வாழும் இடங்களைப் பாதுகாக்கத் தமிழ் மக்கள் தீர்மானித்திருப்பதையும் உலக நட்பரசுகள் பிரித்தானிய சமராச்சிய நாடுகள் கவனத்திற்குக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறோம் என்று பின்வரும் தமிழ்ப் பிரதிநிதிகள் கைச்சாத்திட்டு அறிக்கை ஒன்று வெளியிட்டிருக்கின்றனர்.

திருவாளர்கள்: சி. சுந்தரலிங்கம், எஸ். ஜே. வி. செல்வநாயகம், ஜீ. ஜீ. பொன்னம்பலம், வி. ஏ. அழகக்கோன், ஏ. அமிர்தலிங்கம், எஸ். யு. எதிர்மானசிங்கம், வி. ஏ. கந்தையா, எம். எஸ். காரியப்பர், எம். எம். முஸ்தாபா, வி. என். நவரத்தினம், சி. இராசதுரை, சி. வன்னியசிங்கம், எஸ். ஆர். கனகநாயகம்.

**சேக்கிழார் விழா**

வைகாசி 27, 28, 29, 30ம் நாட்களாகிய (9, 10, 11 12-6-56) சனி ஞாயிறு திங்கள் கொழும்பு செவ்வாய்க்கிழமைகளில் விவேகானந்த சபை மண்டபத்திலும் ஞாயிற்றுக்கிழமை மாலை வெள்ளவத்தைசைவமங்கையர் கழக மண்டபத்திலும் மேற்படி விழா நடைபெறுமெனச் சபைக் காரியதரிசி அறியத் தருகின்றார்.

பொலநறுவை (புலஸ்திபுரம்)

# ஆனி உத்தர மகோற்சவம்

## அழைப்பும் யாத்திரை வசதியும்

இராஜராஜ சோழனும் இராஜேந்திர சோழனும் இலங்கையை ஆட்சி புரிந்த காலத்தில் (கி. பி. 994—1017) ஜனநாதபுரம் அவர்களுடைய தலைநகராகவிளங்கியது. மாண்புசால் இந்நகரில் அவர்கள் மேற்படி ஆலயத்தை அமைத்துப் பணியாற்றியத் தொழுதனர். இவர்களின் பிற்சந்ததியினனாகிய பரகேசரி வர்மன் இக்கோவிலுக்குக் கொடுத்ததீபத்தை கோவில் பொறுப்பாளர்கள் சந்திர சூரியர் வானிலே தோன்றும்வரை எரியும்படி செய்வோமென வாக்குறுதி செய்துகொண்ட விபரங்கள் ஆலயச்சுவர்களிலுள்ள கல்வெட்டுகளில் அடங்கியுள்ளன.

இங்ஙனம்புகழ்கொண்ட, பழமை மிகுந்த, இச்சிவாலயத்தில் ஆண்டுதோறும் ஆனி உத்திரத்தில் நிகழும் உற்சவம் இவ் வாண்டும் ஆனி மாதம் 30ந் திகதி (13-7-56) விசேஷ ஏற்பாடுகளுடன் நடைபெறும்.

இத் திருப்பணியில் கலந்து ஈசனருள் பெற்றேகுமாறு அனைவரையும் அழைக்கின்றோம் என்று பொலநறுவை புலஸ்தியபுர இந்து மகாசபையார் அழைக்கின்றனர்.

மேற்படி மகோற்சவத்துக்கு யாழ்ப்பாணமிருந்து ஆடி (ஜீலாய்) 12ம் திகதி ஒரு பிரத்தியேக விசைவண்டி (பஸ் ஒழுங்கு செய்யப்பெறுகின்றது. யாத்திரிகர்கள் தொகைக்குத் தக்கபடி விசைவண்டிச் செலவு ஒவ்வொருவருக்கு ரூபா 14/— வரையில் வரும். யாத்திரைக்குப் போகிறவர்களுக்கு பொலனறுவ இந்து மகாசபையார் தங்கும் இடவசதி சாப்பாட்டு வசதிகளும் இலவசமாக ஒழுங்குபடுத்துவார்கள். விரும்புவோர் கீழேகாணும் விலாசத்துக்கு ஆனி (யூன்) 30 திகதிக்கு முன் தெரிவிக்கவும் என்று திரு. அ. தையல்பாகர் தொல்புரம், சுளிபுரம் அறியத் தருகின்றார்.

——

**சிங்களச்சட்ட எதிர்ப்பு**

—

யாழ்ப்பாணப் பிரிவுக் கிராமச்சங்கங்களின் கூட்டமொன்றில் தமிழுக்குச் சம அந்தஸ்துக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் அப்படிக் கொடுக்கப்படாவிட்டால் கிராமச் சங்கங்கள் செய்யும் எல்லாக் கருமங்களும் தமிழிலேயே செய்யப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

——

**மொழிச்சட்டமும் அரசாங்க சேவையும்**

——

அரசாங்கத்தின்மொழிக் கொள்கை பற்றித் தங்கள் எதிர்ப்பை அறிவித்தற்கு அரசாங்க சேவையிலுள்ள தமிழ் மக்கள் அணிமையில் ஒரு மாபெருங் கூட்டம் ஒன்று கூடுவார்களாம். இக்கூட்டம் எங்கே நடக்குமென்று தீர்மானிக்கப்படவில்லை. ஆனல் இது கொழும்பிலேயே நடக்கும் என்று கருதப்படுகிறது. இதன்பின் வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் இத் தொடர்பில் கூட்டங்கள் நடத்தப்படுமாம்.


# கம்பராமாயணம்

(யுத்தகாண்டம்)

**கும்பகருணன் வதைப்படலம்**

(ஒன்று முதல் 170 பாட்டுக்கள்)

------- யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையின் வெளியீடு -------

பரமேசுவரக் கல்லூரித் தமிழ்விரிவுரையாளர்,
வித்துவான், பண்டிதர், சைவப்புலவர், **க. வேந்தனர் அவர்கள்** எழுதிய
**விளக்கவுரையுடன் விரைவில் வெளி வரும்.**

- ஒவ்வொரு பாட்டிற்கும், கொண்டு கூட்டு, பொருள், பொழிப்பு, விளக்கம், குறிப்பு எனும் உறுப்புகள்அமைய உரை எழுதப்பட்டுள்ளது.
- விளக்கத்தில் செய்யுள் நயம் விரிக்கப்படுகின்றது. செய்யுளை உணர்ந்து உணர்ந்து தீட்டிய உரை நயம் மாணவர்க்கு நல் விருந்தாகும்.
- உவமான உவமேய விளக்கம், மாணவர் உள்ளத்தில் பதியக் கூடிய முறையில் எழுதப்பட்டுள்ளது.

**இத்துடன்,**

**170 பாட்டுக்களையும் அவற்றின் பொருள்நிலைக்கு ஏற்பப் பத்தொன்பது பிரிவுகளாக வகுத்து, அப் பிரிவுகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி தலையங்கங்கள் கொடுத்துப் பின் ஒவ்வொரு பிரிவுகளின் கீழ் உள்ள பாட்டுக்களின் பொருளையும் தொகுத்துத் தெளிவான உரைநடையில் எழுதப்பட்டுள்ளது. இதனல் மாணவர்கள் மிக எளிதாகப் பாட்டின் பொருளை விளங்கிக்கொள்வார்கள்.**

மாணவர்கள் தாமாகவே படித்து, இலக்கியத்தை நயத்தற்கு வழிகாட்டும் வாய்ப்பான உரை.

## சைவ மகாசபை

காரைநகர்

—0—

### 41-வது வருடாந்தவிழா

மேற்படிசபையின் 41வது வருடாந்த விழா சென்ற 26-5-56 சனிக்கிழமை காலை சபை மண்டபத்தில் கூடப்பட்டது.

பின்வரும் உத்தியோகத்தர்கள் நிகழும் வருடத்திற்கு தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. இ. நாகலிங்கம் அவர்கள் அதிபர் வியாவில் சைவ வித்தியாசாலை, உபதலைவர் திரு. ஆ. கந்தையா அவர்கள் ஆசிரியர், திரு. ஆ. ச. கதிர்வேல் அவர்கள் (கச்சேரி) காரியதரிசி திரு. அ. நாகலிங்கம் அவர்கள் (இளைப்பாறும் மலய உத்தியோகத்தர்) உபகாரியதரிசி திரு. K. K. நடராசா அவர்கள் காரைநகர் இந்துக்கல்லூரி தனாதிகாரி திரு. ச. சுந்தரம்பிள்ளை அவர்கள் (தலைமை ஆசிரியர் வேலணை தமிழ் வித்தியாசாலை) புத்தக அதிபர் திரு. த. நடராசா அவர்கள் இந்துக்கல்லூரி, காரைநகர். நிர்வாகசபை அங்கத்தவர்களும் தெரிவுசெய்யப்பெற்றனர்.

ஸ்ரீ சண்முகநாத அச்சகச் சொந்தக்காரரும் அதிபருமாகிய திரு சி. ச. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் போஷகர்களுள் ஒருவராக ஏகமனதாக நியமிக்கப் பெற்றார்.

## சேக்கிழார் நாயனார் குருபூசை

நாள்: வைகாசி மீ ௩0 ௨ (12-6-56) செவ்வாய்க் கிழமை

இடம்: சைவபரிபாலன சபை நாவலர் மண்டபம்.

நிகழ்ச்சிகள்:

முற்பகல் 9 — பிற்பகல் 1 மணி கடவுளாராதனை, புராணபடனம் சேக்கிழார் புராணம் மாகேசுர பூசை.

பொதுக் கூட்டம்: தலைவர் பண்டிதர் வ. மு. இரத்தினேசுவர ஐயர்

இரவு 6-30 — 7 சேக்கிழார் பிள்ளைத் தமிழ் ஓதுதல் திரு. மு. சுப்பையா தேசிகர்

பிரசங்கம்: "சேக்கிழார் நாயனார்" —திரு. வே. சோமசுந்தரம்

சைவ பிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்,
சைவபரிபாலனசபை
யாழ்ப்பாணம், 5-6-56, (து 156)

## திருக்கோணமலை மாநாட்டுக்குத் தடையாம்

இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து ஊர்வலமாகச் சென்று திருக்கோணமலையில் தமிழரசுக் கட்சியார் நடத்தவிருக்கும் மகா நாட்டுக்கு அரசாங்கம் தடைவிதிக்கின்றதாம். முதல் மந்திரி ஸ்ரீ பண்டாரநாயக ஸ்ரீ செல்வநாயகம் அவர்களுக்கு இதுபற்றி எழுதியிருக்கின்றாராம்.

## திரும்பிப் போனது சிங்களக் கடிதம்

கல்விப் பகுதியார் சுதுமலை கிராம முன்னேற்றச் சங்கத்துக்குத் தனிச் சிங்களத்தில் ஒரு கடிதம் அனுப்பியிருந்தார்களாம். இது விளங்காமையால் தமிழில் எழுதும்படி கேட்கும் ஓர் தமிழ்க் குறிப்புடன் சங்கக் காரியதரிசி கடிதத்தைத் திருப்பி அனுப்பியிருக்கின்றாராம்,

## நாவலப்பிட்டியில் தமிழ் ஐக்கிய முன்னணி

தமிழ் மொழிக்கும் தமிழ் இனத்துக்கும் எதிராக இன்று உண்டாகும் இயக்கங்களை எதிர்ப்பதற்கு இந்துக்கள், கிறிஸ்தவர்கள் முஸ்லிம்கள் ஆகிய யாவரும் ஒன்றுசேர்ந்து ஒரு தமிழர் ஐக்கிய முன்னணியை நாவலப்பிட்டியில் அமைத்திருக்கின்றார்கள். தமிழரசுக்கட்சியின் எதிர்ப்பு இயக்கங்களில் இவர்கள் ஈடுபடுவார்களாம்:

## காகபுசுண்டர் குறிப்பிட்ட கிரக மாற்றங்கள்

4-ம் பக்கத் தொடர்ச்சி

கூற்றுக்குச் சான்றுபகருவனவா யிருக்கின்றன. 'டெயிலி நியுஸ்' 24-2-56 பத்திரிகையில் பின் வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. "கிறீன்விச் வளிமண்டல அவதான நிலையத்தில் இதற்குமுன் உள்ளதிலும் பார்க்க இன்று ஞாயிற்றின் கதிர்ஒளி இரண்டு மடங்காயுள்ளது. கிறீன்விச் நேரத்தின்படி வியாழக்கிழமை காலை 3.45 தொடக்கம் 2 மணித்தியாலங்கள் இம்மாற்றம் நீடித்திருந்தது என்று சோதிட நூலார் கூறுகின்றனர். 1945ம் ஆண்டில் சாதாரண நாட்களிலும் பார்க்க 40 வீதம் கூடிய ஞாயிற்றின் கதிரொளிஇருந்தது. கிறீன்விச் அவதான நிலையத்தில் கடமையாற்றுபவர் ஒருவர் 'ஞாயிற்றில் அசாதாரணமான மாற்றம் நடைபெறுகிறது என்று கூறினார் சூரியனில் இம் மாற்றம் நடைபெறும்பொழுது கலிபோனியாவிலுள்ள 'மவுண்டு வெல்சன்' நிலையத்திலிருந்து சூரியனைப் படம் பிடித்த வான நூலார் 1951 க்குப் பின் இன்றெடுத்த நிழற் படம் தான் தெளிவாகி யிருக்கிறதென்று கூறியுள்ளனர். அமெரிக்கப் பேராசிரியர் டாக்டர் எட்வேட் தெல்லர் 'தூரத்திலுள்ள நட்சத்திரம் ஒன்றிலிருந்து பூமியில் விழும் ஒளிக்கதிர்கள் அபாயத்தையும் மரணத்தையும் உண்டாக்கக்கூடியதேஎன்றார். இச்செய்தியும் காகபுசுண்டரின் வாக்குக்குச் சான்றுபகர்வதுபோலவே இருக்கிறது.

விஞ்ஞான ஆசிரியர் யோன் கெயில் என்பவர் "சோதிடக் கலையைச் சரியாக விளக்குவதானால் அதைப் பின் வருமாறு கூறலாம். அது விண்ணிலுள்ளதற்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பைக் காட்டும் சாத்திரமாகும். பக்கங்களில் உள்ள வெளிகளிலிருந்து பூமியைச்சேரும் சக்திகள் மனிதனில் உண்டாக்கும்' விளைவுகளை அறிதற்கு நன்முறையில் சேகரித்து பகுக்கப்பட்ட அறிவு" என்று கூறியுள்ளார். இந்தவிதமாக மேல்நாட்டறிஞர் கூறும் இவ் வானநூலறிவு தமிழர்க்குப் புதிதல்ல. "வியாழன் இராசி வட்டத்தை ஐந்து முறை சுற்றி வருதலாகிய அறுபது ஆண்டுகள் கொண்ட கால அளவை ஆரியருக்கு உரியதன்று" என்று மக்லீன் என்பவரும் "தமிழருடைய கணிதமுறையே வழக்கிலுள்ள எல்லாக் கணிதங்களிலும் நிதானமானது" என்று டாக்டர் சிலாட்டர் என்பவரும் கூறியுள்ளனர். கலைவல்லஞான சம்பந்தர் வழிநடைக்கு ஆகாநட்சத்திரங்களை "ஒன்பதொடொன்றொடேழுபதினெட்டொடாறும் உடனாய நாள்களவை" என்று கோளறு பதிகத்தில் குறிப்பிட்டு, வானு நூல் நுட்பத்தைத் திருக்கழுமலப் பதிகத்தில் "விலங்கலமர் புயன் மறந்து மீன் சனிபுக்கூன் சலிக்குங் காலந்தானுங் கலங்கலிலா மனப் பெருவண்கையுடைய மெய்யர் வாழ் கழுமலம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

பண்டுதொட்டே ஒருகலையாகத் தமிழர் வாழ்வில் நிலவிவந்த சோதிட வான நூற்கலை இன்று ஒருபகுதியினர் பிழைப்பைத் தரும் தொழிலாகவே இருக்கிறது. மறுமலர்ச்சித் தோழரின் சொல்லம்பினுல் தாககப்படுகிறது. இன்று இலங்கையிலேசிறந்த முறையில் இக் கலையை வளர்ப்பதற்கேற்ற உதவியில்லை. இத்துறையில் முன்னேற்றமடைவதற்கு ஆராய்ச்சி நிலையம் ஒன்று கட்டி மக்களை இக் கலையில் ஊக்குவிப்பதற்கு ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருப்போர் ஆவன செய்ய வேண்டும். சோதிடம் என்றால் 'பொய்யும் புரட்டும் சொல்லுவதே' என்று மக்கள் கருதும் இத்தன்மை மாறவேண்டும். இத்தன்மை மாற இக் கலை பயில்வோர் செயலாற்ற வேண்டும். அன்றே இக் கலை நன்று வளரும் என்பது திண்ணம்.

## அணிந்துரை அரங்கம்

**இலங்கைச் சரித்திரம்**

ஒல்லாந்தர்காலம்

ஆசிரியர்: மட்டுநகர் வித்துவான் திரு. எப். எக்ச். சி. நடராசா.

வெளியிடுவோர்: கலைமகள் கம்பெனி 124 செட்டியார்தெரு கொழும்பு 11.

பிரதி விலை ரூபா 1-00

அறிவுத் தகுதியுடன் பல்லாண்டுகளாகப் பெற்ற ஆசிரிய அனுபவமும் உடைய ஒருவர் எழுதிய இவ்வெளியீடுகல்வித்துறையில் உள்ளாரால் நன்கு வரவேற்கப்பெறுமென்பது சொல்லாமலே யமையும்.

## உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 10—6—56 —— 16—6—56. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

இந்தவாரம் தனலாபம் நிச்சயம். உம்முடைய சகோதர சகோதரிகள் அதிக உதவியாயிருப்பர். வாரஇறுதியில் குடும்பத் தொடர்பில் சில துன்பங்களுக்கிடமுண்டு. ஆனால் அவை ஆபத்தான விளைவுகளை உண்டாக்க மாட்டா.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

எதிரிகள் அழிவும் வழக்குகளில் வெற்றியும் இந்தவாரம் நிச்சயம். உம்முடைய இடைஞ்சல்களுட்பலவற்றை நீர் நீக்கக்கூடியதாயிருக்கும். சிறிது காலத்துக்குத் தேகசுகம் விசேட கவனம் கொடுக்கப்படவேண்டும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3,

உம்முடைய இனத்தவர்களுடன் நீர் செய்யும் கருமங்களில் இந்தவாரம் கவனமாயிருக்கவும். வழக்கத்திலும் பார்க்கப் பொறுப்புகளும் வேலையுமீகூடுதலாயிருக்கும். பணநிலைமைகள் திருந்தும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,

இனத்தவர்களுடன் இந்த வாரம் சண்டைகளுக் கிடமுண்டு. இரகசியப் பகைவரால் இடைஞ்சல்களுக்கிடமுண்டு. பணநிலைத் திருத்தம் மிகவும் நல்லது. தேகசுகம் பற்றிக் கவனமாயிருக்கவும். வயிற்றுக்கோளாறுகளுக்கிடமுண்டு.

**சிங்கராசி** மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்.

உம்முடைய கருமங்களில் இந்த வாரம் சில நன்மைக்கிடமுண்டு. அறியாதவரும் அன்னியரும் அதிக உதவியாயிருப்பர். போட்டியிடுவோரை வெல்லுதற்கு மிடமுண்டு ஆனால் உம்முடைய திட்டங்களை மெதுவாக முன்னேற்றவும்.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

உமக்கு இத்தவாரம் மனச் சமாதான மிருக்க மாட்டாது. தனலாபம் நிச்சயம். ஆனால் செலவு மதிகரிக்கும். சில பொறிகளுக்குள் அகப்படாதபடி கவனமாய் இருக்கவும்.

**துலாம்** சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

இந்தவாரம் புதியனவாயுண்டாகிய சில கருமங்கள் பற்றி நீர் துன்பப்படுவீர். குடும்பச் சூழலில் சண்டைகளுக்கு மிடமுண்டு. பணத்துறையில் நல்லவாரம்

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

தேகசுகம் இந்தவாரம் சிறிதும் நல்லாயிருக்கமாட்டாது. கந்தோரில் தொந்தரவுகளுக்கு மிடமுண்டு. முதலிரு நாட்களிலும் உம்முடைய எல்லாக் கருமங்களிலும் கவனமாயிருக்கவும். உம்முடைய நடைமுறை அலுவல்களில் சில மாற்றங்களுக் கிடமுண்டு

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

குடும்ப நிலைமைகள் இந்த வாரம் சிறிதும் நல்லாயிருக்க மாட்டா, சிறு கருமங்கள் பற்றி உம்முடைய பங்காளருடன் நீர் சண்டையிடவேண்டி வரும், சுகவீனத்துக்கும் பிள்ளைகள் பற்றித் துன்பத்துக்கு மிடமுண்டு திங்கள் பிற்பகலும் செவ்வாய் புதனும் எல்லாவற்றிலும் பழுதானவை.

**மகரராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

சண்டைகள் தொடுக்க நீர் இந்த வாரம் முந்துவீர். கந்தோரில் தொந்தரவுகளுக்கிடமுண்டு. புதன் பிற்பகலும் வியாழன் வெள்ளியும் கவனமாய்க் கழிக்க வேண்டும். கடைசிநாள் நல்லாயிருக்கும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

கடைசி நாளைத் தவிர இந்த வாரம் மிக நல்லதாக மாறும். தனலாபம் நிச்சயம். ஆனால் பொறுப்புகளும் வேலையும் கூடுதலாயிருக்கும். கடைசிநாளைக் கவனமாய்க் கழிக்கவும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

குடும்பச்சூழலில் இடைவிடாத சண்டைகளும் பிழை எண்ணங்களுமிருக்கும். செலவு கூடுதலாயிருக்கும். புது முயற்சிகளைக் கவனமாய்க் கையாளவேண்டும்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450 ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245 ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னையபலம் கந்தையா அவர்களால் 8-6-56 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.